Written by
Wednesday, 20 August 2008 19:26 -

"சுதசேமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிகை ஆதி திராவிடர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் ஒன்றும் சயெ்யவில்லை என்றும், தங்கள் க□ட்டத்தார் ஆதி திராவிடர்களுக்கு சுவர்க்க வாசலை திறந்து விடப்போவதாகவும், இனியாவது தங்களை வந்து சரணடையும்படி உபதேசிக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியார் ஆதி திராவிடர்களுக்கு நன்மை சயெ்தார்களே, இல்லையேே? அதபை் பற்றி அதிக கவலை வணே்டாம். அது ஆதி திராவிடர்களுக்கு தெரியும். ஆனால் காங்கிரசின் ஆதிக்கத்தை அடைந்த சுயராஜ்யக் கட்சியார் ஆதி திராவிடர்களுக்கு என்ன நன்மை சயெ்தார்கள்? என்ன பதவி கொடுத்தார்கள்? என்ன உத்தியேகம் தந்தார்கள்? இந்தியா சட்டசபகை்கு ஓரு ஆதி திராவிடரை நிறுத்தினார்களா? நிறுத்த ஆளில்லாமல் திண்டாடும் சனெ்னை சட்டசபகை்கு ஓரு ஆதி திராவிடரயைாவது நிறுத்தினார்களா? சனெ்னை கார்ப்பரஷேன் கவுன்சிலுக்கு ஆதி திராவிட வகுப்பில் பிறந்த ஓருவரயைாவது நிறுத்தினார்களா? வறேு வகயைில் இவர்கள் மட்டிலும் என்ன சாதித்து விட்டார்கள்?

ஓரு சமயம் ஆதி திராவிடர்களில் எவராவது; ஓருவருக்கு அதுவும் தன்னடேு க□டத் தன்னதை் தலவைர் என்று சொல்லித் திரிய - அதுவும் வீ □ ட்டில் பட்டினி, சுதத்மாய் சலெவுக்கில்லை என்று கடே்கும்படேதும் - நீ □ கொடுக்கிறாயா ஜஸ்டிஸ் கட்சியில் சரேட்டுமா என்று மிரட்டும் படேதும் ஒன்றே இரண்டே ர□பாய்கள் பிச்சை படேடுவதுபேலே கொடுத்துக்கொண்டு வந்திரும்கிறததை் தவிர வறேெனென்ன சயெ்திரும்கிறார்கள்? அல்லது ஆதி திராவிடர்களுக்கு வகுப்புவாரி உரிமை வாங்கித் தர சம்மதிக்கிறார்களா?

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று சொனெ்னாலே சொல்பவனை, "ஜஸ்டீ □ ஸ் கட்சியில் சரேந்து விட்டான், பாவி, துரேகி" என்று சொல்லுகிறார்கள். இவர்களை நம்பி என்ன பலனை அடயை முடியும்? காஞ்சீ □ வரத்தில் க□டிய பிராமணரல்லாதார்களாவது எல்லரேும் ஒன்றாய்ச் சரேந்து ஏகமனதாய் ஆதி திராவிடர்களுக்கு, அவர்கள் எண்ணிக்கைக்கு தகுந்த அளவுக்கு மலோகக் க□ட சட்டசபை, கார்ப்பரஷேன், உத்தியேகம், பதவி எல்லாவற்றிலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாய்த் தீ □ ர்மானித்தார்களே; அதகை் கடெுத்தவர்கள் யார்? சுயராஜ்யக் கட்சியின் "மாபரெும் தலவைரான" சிறீ □ மான் சீ □ னிவாசய்யங் காரும் "காந்தி சிஷ்யரும் ஒப்பற்ற தலவைருமான" சிறீ □ மான் சி.ராஜ களேபாலாச்சாரியாரும் க□ட சதியாலேசனை சயெ்து சிறீ □ மான் கலியாணசுந்தர முதலியாரயைும் கடெுத்து இத்தீ □ ர்மானம் காங்கிரஸ் மகாநாட்டிற்கே கொண்டுவரக் க□டாது என்று தடுத்துவிட்டார்கள். தீ □ ர்மானம் கொண்டுவரக்க□ட

சம்மதிக்காத காங்கிரஸ் தலைவரும் தீ ர்மானத்தை நிறைவேற்ற சம்மதிப்பார்களா? என்பது ஆதி திராவிடர்களுக்குத் தெரிய மூடியாமல் போகாது.

ஜஸ்டிஸ் கட்சியாராவது ஆதி திராவிடர்கள் கேட்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சரியானதென்றும், அதற்காக தாங்கள் போராடியும், அதை தங்கள் கட்சியின் முக்கியக் கொள்கையாகவும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கூச்சல் போட்டதன் பலனாய்த்தான் சிறீ மான்கள் எம்.சி.ராஜா, வீ ரய்யன் முதலிய மணிகள் ஆதி திராவிட வகுப்பில் இருக்கிறார்கள் என்றாவது பிறத்தியாருக்குத் தெரியும்படியாய் இருக்கிறது. அது இல்லாவிட்டால் இவர்களுக்கு சட்டசபை ஏது? கான்பரன்ஸ் ஏது? தீ ர்மானம் ஏது? "எங்கள் கட்சியில் வந்து சேருங்கள், நாங்கள் சாதித்து விடுகிறோம்" என்று பிராமணர்கள் கூப்பிடுவது ஏது? சிறீ மான் சீ னிவாசய்யங்கார் பணம் ஒன்றிரண்டு ரூபாய்கூட ஆதி திராவிடர்களுக்காவது கிடைப்பதேது?

(குடிஅரசு-23.05.1926)

http://periyarvizippunarvuiyakkam.blogspot.com/2008/07/blog-post_19.html